


23.12. 2024

தலைப்புச் செய்திகள்

- மத்திய அரசின் வேலைவாய்ப்பு திட்ட முகாம்கள் இளையோருக்கு ஆளுமை வழங்குவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- நாடுமுழுவதும் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.
- தமிழ்நாட்டில் மனநலம் சார்ந்த நோய்களை தவிர்க்க குழந்தைகளின் செயல்பாடுகளை பெற்றோர் கண்காணிக்க வேண்டுமென்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் அறிவுறுத்தியுள்ளார்.
- விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி தமிழக அரசு செயலாற்றி வருவதாக மாநில அமைச்சர் திரு. எ.வ.வேலு கூறியுள்ளார்.
- நெல்லை மாவட்டம் மணி முத்தாறு அணையிலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர் - ரோஸ்கர் மேளா

நாடுமுழுவதும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் வேலை வாய்ப்புகள் இளையோருக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்

பிரதமரின் ரோஜ்கர் யோஜனா மத்திய அரசு பணியிடங்களில் இளையோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 14-வது கட்ட நிகழ்வின் கீழ் நாடுமுழுவதும் 71 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை காணொலி வாயிலாக இன்று வழங்கி பிரதமர் உரையாற்றினார்.

பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், கல்வி நிறுவனங்களில் கடந்த 10 ஆண்டுகளாக மத்திய அரசு வேலைவாய்ப்பு மேளா மூலம் பணியிடங்களை நிரப்பி வருவதாக குறிப்பிட்டார்.

ரோஸ்கர் திட்ட முகாம்கள் இளையோர்களின் திறனை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு ஆளுமை வழங்குவதாக குறிப்பிட்டார்.

இளையோரின் திறன்மேம்பாடு, திறன் பயன்பாடே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று பிரதமர் கூறினார்.

மத்திய அரசின் புதிய கொள்கைகளால் இளையோருக்கு புதிய வாய்ப்புகளும், ஊரக பகுதிகளில் சுய வேலைவாய்ப்பும் அதிகரித்து வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த பாரதமாக இந்தியாவை உருவாக்க உறுதி ஏற்கப்பட்டிருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

விண்வெளித்துறையில் இந்தியா தனது கொள்கைகளை மாற்றியதன் மூலமும், பாதுகாப்புத் துறையில் உற்பத்தி பெருக்க நடவடிக்கைகளாலும் இளைஞர்கள் பெரிதும் பயனடைந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் சீரிய நடவடிக்கைகளால் கைப்பேசி உற்பத்தியில் 2-வது பெரிய நாடாகவும், ஸ்டார்ட் அப் துறையில் 3-வது பெரிய நாடாகவும் இந்தியா உருவெடுத்துள்ளதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய ஊழியர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் இன்று வழங்கப்பட்ட 71 ஆயிரம் பணியிடங்களில், துணை ராணுவப்படையில் 50 ஆயிரம் பணியிடங்கள் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் 45 இடங்களில் மத்திய அமைச்சர்கள் ரோஜ்கர் மேளா திட்டத்தின் கீழ் பணி நியமன ஆணைகளை இளையோருக்கு இன்று வழங்கிய நிலையில், உள்துறை, அஞ்சல், உயர்கல்வி, சுகாதாரம், குடும்பநலம், நிதித்துறைகளில் இளையோர் பணியாற்ற, பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

தமிழகத்தை பொறுத்தவரை சிவகங்கையில் மத்திய கனரக தொழிற்சாலைகள் துறை இணையமைச்சர் திரு. பூபதி ராஜூவும்

திவள்ளூர் மாவட்டம் ஆவடி மத்திய ரிசர்வ் போலீஸ் படை மையத்தில், தொலைத் தொடர்புத்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகரும் இளையோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

ஆவடியில் வேலைவாய்ப்பிற்கான ஆணைகளை பெற்ற இளையோர் தங்களது மகிழ்ச்சியை எமது செய்தியாளரிடம் பகிர்ந்து கொள்கையில்

.. வாய்ஸ் ..

கடந்த அக்டோபர் 2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 13 கட்டங்களாக நடைபெற்ற ரோஸ்கர் மேளாவில் லட்சக்கணக்கான இளையோர் அரசு பணியிடங்களில் வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

பிரதமர் கிறிஸ்துமஸ்

இதனிடையே பிரதமர் புதுதில்லியில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை சார்பிலான கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டங்களில் இன்று பங்கேற்பதோடு, அவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

கத்தோலிக்க திருச்சபை சார்பிலான கிறிஸ்துமஸ் விழாவில் பிரதமர் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.

❖❖❖❖❖❖❖

தேசிய விவசாயிகள் தினம்

தேசிய விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா சவுத்ரி சரண்சிங்கின் பிறந்தநாள் தினம், விவசாயிகள் தினமாக கொண்டாடப்படும் நிலையில் குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. ஜக்தீப்தன்கர், தேச வளர்ச்சிக்காகவும், விவசாயிகள் மற்றும் ஊரக மேம்பாட்டிற்காகவும் அளப்பறிய சேவையாற்றியவர் சரண் சிங் என்று புகழாரம் சூட்டியுள்ளார்

25-வது விவசாயிகள் தினம் அடுத்த ஆண்டு கொண்டாடப் படுவதால் நாடுமுழுவதும் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. ஜக்தீப் தன்கர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

ஒப்பந்த தொழிலாளர்கள்

தமிழ்நாட்டில் சென்ற வாரம் மின் பராமரிப்பு பணிகளை மேற்கொண்ட போது மின்சாரம் தாக்கி உயிரிழந்த 2 ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்பாக தமிழக தலைமைசெயலர் மற்றும் காவல்துறை தலைமை இயக்குநருக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

ஊடக செய்திகளை மேற்கோள் காட்டியுள்ள ஆணையம் இருவாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி ஊராட்சித்துறை சார்பில் 21 மாவட்டங்களில், 64 அரை கோடி ரூபாய் மதிப்பிலான 400 வகுப்பறை கட்டிடங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்தார்.

6 மாவட்டங்களில் 35 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 9 ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடங்களையும் அவர் திறந்து வைத்தார்.

இத்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக எட்டரை கோடி ரூபாய் மதிப்பிலான 95 வாகனங்களின் சேவையையும் அவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மூலமாக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் விளையாட்டு துறைக்கான 3 சதவிகித ஒதுக்கீட்டின் கீழ், 84 வீர வீராங்கனைகளுக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

கீதாஜீவன்

தமிழ்நாட்டில் குழந்தைகளின் செயல்பாடுகளை 3 வயதுவரை பெற்றோர் உன்னிப்பாக கண்காணிக்க வேண்டுமென்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன் அறிவுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடியில் மனநல பாதிப்பிலிருந்து குணமடைந்த பெண்களுக்கான மகிழ்வகம் மையத்தை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், கோவில்கள் மற்றும்

பொது இடங்களில் கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சைகள் பல்வேறு மையங்கள் வாயிலாக வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

சிகிச்சை முடிந்து குணமடைந்த பின்னர் வீடுகளுக்கு திரும்ப இயலாதவர்களை பராமரிக்க தொண்டு நிறுவனத்தின் மூலம் மகிழ்வக மையம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

எ.வ. வேலு

தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில் 38 ஆயிரத்து 904 கோடி ரூபாய் நிதியில் வேளாண் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இடைத்தரகர்கள் இல்லாமல் விவசாயிகள் லாபம் ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் உழவர் சந்தைகள் தமிழகத்தில் திறக்கப்பட்டதாக கூறினார்.

விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி அரசு செயலாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக உழவர் சந்தைகளை ஆய்வு செய்த அமைச்சர் விவசாயிகளிடம் விற்பனைகள் நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖

மு.பெ.சாமிநாதன்

புதுதில்லி குடியரசு தின அணிவகுப்பு ஊர்திகள் சுழற்சி முறையில் அனுமதிக்கப்படுவதாக தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2023-24ஆம் ஆண்டுகளில் பங்கேற்ற தமிழ்நாடு அரசின் ஊர்திகள் இனி 2026-ஆம் ஆண்டில்தான் பங்கேற்க முடியும் என்று கூறியுள்ளார்.

ஒரு மாநிலத்தின் ஊர்திகள் 2 ஆண்டுகள் தொடர்ந்து இடம்பெற்றால் 3-வது ஆண்டில் அது அனுமதிக்கப்படாது என்ற நடைமுறையை மத்திய அரசு பிறப்பித்திருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு தொடர்ந்து 3-வது முறை அனுமதி வழங்கி, தமிழகத்திற்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது பாரபட்சமான செயல் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

தமிழ்நாடு பள்ளி கல்வித்துறைக்கான மத்திய அரசு நிலுவைத்தொகை இதுவரை வழங்கப்படவில்லை என மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், நிதி நெருக்கடி இருந்த போதிலும் மாநில அரசு கல்வித்துறையின் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

மணிமுத்தாறு அணை

நெல்லை மாவட்டம் மணி முத்தாறு அணையிலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

மாநில அமைச்சர் திரு. K.N.நேரு, தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு ஆகியோர் அணையிலிருந்து 440 கனஅடி தண்ணீரை விடுவித்தனர்.

இதன் மூலம் நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் 12 ஆயிரத்து 18 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு. K.N.நேரு வரும் மார்ச் 31-ம் தேதிவரை, 99 நாட்களுக்கு தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிடப்படும் என்றார்.

தொடர்ந்து மணிமுத்தாறு பேரூராட்சி அலுவலகத்தில் மாஞ்சோலை தொழிலாளர்கள் 12 பேருக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்பின் வீடுகளையும் அமைச்சர் வழங்கினார்.

தொடர்ந்து களக்காடு பச்சையாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

இதன்மூலம் இப்பகுதிகளுக்கு உட்டபட்ட 9 ஆயிரத்து 592 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

❖❖❖❖❖❖❖

பிரதீப்குமார்

கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவை ஒட்டி திருச்சி மாவட்ட மைய நூலகத்தில் வெள்ளி விழா புகைப்பட கண்காட்சியை ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் இன்று திறந்துவைத்தார்.

அரியலூர் மாவட்டத்தில் வெள்ளி விழா புகைப்பட கண்காட்சியை ஆட்சித்தலைவர் திரு ரத்னசாமி துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 100 சதவிகித குடிநீர் தன்னிறைவு பணிகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக இதன் கண்காணிப்பு குழு தலைவர் திரு. ஜகத்ரட்சகன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில அமைச்சர் திரு. காந்தி மத்திய மாநில அரசின் நலத்திட்டங்கள் குறித்து ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் உள்ளாட்சி பிரதிநிதிகள் எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மதுரையில் தியாக சீலர் கக்கன் நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா மேலூர் தும்பை பட்டி கிராமத்தில் உள்ள அன்னாரது மணிமண்டபத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

கடலூர் மாவட்டத்தில் ஆட்சி மொழி சட்டவாரம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்யா, கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖

புரோ கபடி

புனேவில் நடைபெறும் புரோ கபடி லீக் போட்டியில் இன்று குஜராத் - டில்லி அணியையும்,

புனே - தமிழக அணியையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.